# FIRST INFORMATION REPORT

## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8035269

1. District மாவட்டம் : தஞ்சாவூர் | PS காவல்நிலையம் : லஞ்ச ஒழிப்பு | Year ஆண்டு : 2018 | FIR No. மு.த.அ. எண் : 03/2018 | Date நாள் : 8.02.2018

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம், 1988 | Sections பிரிவுகள்: 7

(ii) Act சட்டம்: — | Sections பிரிவுகள்: —

(iii) Act சட்டம்: — | Sections பிரிவுகள்: —

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை 5.2.18 at 16.00 hrs 7.2.18 at 16.00 hrs.

Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 6.2.2018 | Time நேரம் : 17.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOL-I | Time நேரம் : 1700 hrs

4. Type of Information : Written/ Oral :

தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:

குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் 70 km கிழக்கே.

Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி உதவி செயற்பொறியாளர் அலுவலகம் (TANGEDCO) ஒரத்தநாடு.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —

இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K. தங்கவேல் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் கோவிந்தன்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 31 வயது | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் விவசாயம் | (g) Address : முகவரி 160/4, [illegible] தெரு, [illegible] தாலுகா.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)

தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. ஜெயச்சந்திரன், ADE } உதவி செயற்பொறியாளர் அலுவலகம்,
2. [illegible], PA } TANGEDCO, ஒரத்தநாடு.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:

குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— [illegible] —

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

06.02.2018 ந்தேதி நான் நிலைய பொறுப்பில் இருந்த போது மாலை சுமார் 17.00 மணிக்கு K.தனவேல்,(31), த/பெ கொளஞ்சி, 160/14,மாரியம்மன் கோவில் தெரு, பெரியகொசப்பள்ளம், திட்டகுடி தாலுக்கா, கடலூர் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு; அனுப்புனர், K.தனவேல்,(31), த/பெ கொளஞ்சி, 160/14,மாரியம்மன் கோவில் தெரு, பெரியகொசப்பள்ளம், திட்டகுடி தாலுக்கா, கடலூர் மாவட்டம், பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு துறை, கடலூர் மாவட்டம், நான் திட்டக்குடி தாலுக்காவில் உள்ள பெரியகொசப்பள்ளம் கிராமத்தில் தையல்நாயகி இன்ஜினரிங் வெல்டிங் ஓர்க்ஸ் என்ற பெயரில் தொழில் செய்து நடத்தி வருகிறேன். என்னுடைய தொழிலை விரிவாக்கம் செய்ய துறையூர் கிராமத்தில் செந்தூர்வேலன் நகரில் முத்துசாமி என்பவருக்கு சொந்தமான காலிமனையை ரூ.20,000/-க்கு முன் பணம் செலுத்தி மாத வாடகை ரூ.2,500/- தருவதாக பேசி முடிவு செய்து, இரண்டு வருடத்திற்கு வாடகை

(தொடர்ச்சி இணைப்புதாளில் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு K. Thana

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
8.2.2018 @ 9.45 hrs

Name: பெயர் ..............................
Rank: நிலை ........................No. எண் ..........

* GCP-240-34(Type 2) 90,000 Cps 21.3.16(HCL-12)p.2

ஒப்பந்தம் செய்து கொண்டேன். அந்த இடத்தில் வெல்டிங் தொழில் செய்ய மின்சார இணைப்பு வேண்டி நான் சுமார் 1 1/2 மாதத்திற்கு முன்பாக பெண்ணாடம் AE ஆபிஸிற்கு சென்று, அவர்கள் கேட்ட ஆவணங்களை வைத்து மனு செய்தேன். அந்த ஆபிஸில் வேலை செய்யும் பழனிமுத்து என்பவர் என்னுடைய மனுவை வாங்கி கொண்டார். அவர் என்னிடம் மனுக்களை கம்யூட்டரில் ஏத்த வேண்டும் என்று சொல்லி, அதற்கான செலவிற்கு ரூ.200/- தனியாக வாங்கி கொண்டு, நான் இடத்தை வந்து பார்க்கிறேன் என்று சொல்லி என்னை அனுப்பிவிட்டார். அதன் பின்னர் 30.01.2018 அன்று மாலை சுமார் 03.00 மணிக்கு நான் சர்வீஸ் கேட்ட இடத்தை பார்த்து அளந்து படம் வரைந்து கொண்டார். பின்னர் என்னிடம் இந்த சர்வீஸ் கொடுக்க புதிதாக ஒரு கம்பம் நட வேண்டி உள்ளது, புதிய கம்பம் நடுவதற்கு ADE தான் உத்தரவு போட வேண்டும். நான் இன்னைக்கே எங்க ஆபிஸ் வேலை எல்லாத்தையும் செய்து முடித்து, பேப்பரை ADE ஆபிஸிற்கு அனுப்பிவிடுகிறேன் என்றார். மேலும் என்னை AD ஆபிஸிற்கு போயி ADE ஜானகிராமன், PA ராஜ்குமாரை பார்க்குமாறு சொன்னார். அப்போது பழனிமுத்து என்னிடம், சர்வீஸ் கட்டணம் மற்றும் ஆபிஸ் செலவிற்கு என்று கூறி ரூ.8000/- கேட்டு பெற்றுக் கொண்டார். பின்னர் நான் 5.2.2018 அன்று மாலை சுமார் 04.00 மணிக்கு பெண்ணாடத்தில் உள்ள AD ஆபிஸிற்கு சென்றேன். அங்கு ADE அறையில் ADE ஜானகிராமனும், PA ராஜ்குமாரும் இருந்தார்கள். நான் அவர்களிடம் என்னுடைய சர்வீஸ் சம்மந்தமாக கேட்டேன். அதற்கு PA ராஜ்குமாரும், AD ஜானகிராமனும் உன்னுடைய File இங்க தான் இருக்கு என்றார்கள். அவர்கள் என்னிடம் ஆபிஸ் செலவிற்கு ரூ.5,000/- கொடுக்க வேண்டும் என்று கேட்டார்கள். பணம் கொடுத்தால் தான் புது கம்பம் போட முடியும் என்றார்கள். அதற்கு நான் பணம் தற்போது என்னிடம் இல்லை, பணத்தை ரெடி பண்ணிவிட்டு வரேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பிறகு நான் யோசனை செய்து பார்த்ததில் லஞ்சம் கொடுத்து சர்வீஸ் வாங்க எனக்கு விருப்பம் இல்லை. அதனால் தங்களிடம் புகார் செய்கிறேன். என்னிடம் லஞ்சம் கேட்ட பெண்ணாடம் EB ஆபிஸ் ADE ஜானகிராமன் மற்றும் PA ராஜ்குமார் மீது நடவடிக்கை எடுக்க கேட்டு கொள்கிறேன். இப்படிக்கு Sd/- K.Thanavel, 6.2.2018 அய்யா, நான் இன்று 06.02.2018 ஆம் தேதி மாலை 17.00 மணிக்கு DVAC உத்தரவு No PE 27/2018/TANGEDCO/CL dated: 06.02.2018 ல் கண்ட உத்தரவு படி இந்த புகார் மனுவின் மீது நடவடிக்கை எடுக்க கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் PE 27/2018/TANGEDCO/CL முதல் நிலை விசாரணை பதிவு செய்து விசாரணைக்கு எடுத்து கொண்டேன். Sd/- (சு.திருவேங்கடம்) 6.2.18, அய்யா, எனது முதல் நிலை விசாரணையில் வாதியிடம் குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் லஞ்சம் கேட்டதை உறுதி செய்ய வேண்டி, நான் வாதி தனவேலுவை இன்று 07.02.2018 ஆம் தேதி மாலை 16.00

8/2/18

மணிக்கு பெண்ணாடம், உதவி செயற்பொறியாளர் அலுவலகம் (TANGEDCO) அனுப்பி வைத்து குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களை சந்தித்து மின் இணைப்பு பெற மின் கம்பம் நடுவது சம்மந்தமாக கேட்குமாறு கூறி அனுப்பி வைத்து, நான் அருகில் இருந்து கண்காணித்தேன். வாதி தனவேல், குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களை சந்தித்த போது, அவர்கள் முன்பு கேட்ட லஞ்ச பணம் ரூ.5,000/- த்தில் இருந்து குறைத்து கொண்டு ரூ.3,000/- கேட்டனர். இந்த புகாரில் பிடிக்கக்கூடிய குற்றத்திற்கான முகாந்திரம் இருப்பதினால் புகாரின் மீது வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க முடிவு செய்யப்பட்டது. வாதியிடம் குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் கேட்ட லஞ்ச பணம் ரூ.3,000/- த்தை எடுத்து கொண்டு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு 08.02.2018 ஆம் தேதி காலை 08.30 மணிக்கு ஆஜராக அறிவுறுத்தி அனுப்பி வைத்து, நான் நிலையம் திரும்பினேன். Sd/- (சு.திருவேங்கடம்) 7.2.18. அய்யா, நான் இன்று 08.02.2018 ஆம் தேதி காலை 09.00 மணிக்கு மேற்கண்ட வாதியின் புகார் மனுவின் படி கடலூர் ஊ.த.க பிரிவு குற்ற எண். 03/2018 u/s 7 of PC Act படி வழக்கு பதிவு செய்து விசாரணைக்கு எடுத்து கொண்டேன். (கையொப்பம்) Sd/- (சு.திருவேங்கடம்) 8.2.18. இதன் அசலை வாதியின் புகார் மனுவுடன் இணைத்து கனம் முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், கடலூர் அவர்களுக்கும், இதர நகல்களை உரிய அதிகாரிகளுக்கும் பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது. சு. திருவேங்கடம்
8/2/18

சு. திருவேங்கடம்
காவல் ஆய்வாளர்,
ஊ.த.க பிரிவு கடலூர்.